# இணைய இதழ்களில் பெண்ணியப் படைப்புகள்

முனைவர் துரை. மணிகண்டன்

விரிவுரையாளர், தமிழாய்வுத் துறை, தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

இலக்கிய உலகில் எண்ணிலடங்கா இலக்கியங்களைப் பிரசவம் செய்யும் மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்குச் சொந்தம் கொண்டாடியத் தமிழ் இன்று நான்காம் தமிழாக இணையத்தையும் சேர்த்துக் கொண்டது. இதனால் தமிழ் மெருகேற்றப்பட்டதாக அ.முத்துலிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறார். இதழ்கள் என்பது நாம் இன்று வார, மாத, காலாண்டு, அரையாண்டு இதழ்களைத் தான் கேள்விப்பட்டு இருக்கின்றோம். இன்றைய நவீன யுகத்தில் இணையத்திலும் பல இதழ்கள் தோன்றி தமிழுக்குப் பெருமைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. இவர் இணையத்தில் படைத்து வெளியிட்டு வருகின்றனர் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இணையம்**

உலக அறிவையும், செயல்பாட்டையும் ஒரே இடத்தில் தொகுத்துக் கொடுக்கும் தீவிரப் பணியை இவ் இணையம் செய்கிறது. பல கணிணிகளை ஒன்றிணைத்துப் பல செய்திகளைப் பகுத்துக் கொடுக்கும் பண்பைக் கொண்டது இவ்இணையம் ஆகும். இணையத்தில் எண்ணிலடங்கா நிகழ்வுகளையும், செய்திகளையும் நாம் பெற்றுக் கொள்ளலாம். அந்த வகையில் இணையத்தில் தமிழ் (இணைய) இதழ்கள் தோன்றி அதில் பல படைப்பாளர்களின் ஆக்கங்களையும் வெளியிட்டு வருகின்றன.

**இணைய இதழ்கள்**

தமிழ் இணைய இதழ்கள் இதுவரைக்கும் சுமார் 60 உள்ளது. இக்கணக்குப் புள்ளி விபர அடிப்படையில் தளர்த்தப்படலாம். அவைகளில் குறிப்பிடத்தக்கவையாகத் திண்ணை (www.thinnai.com), பதிவுகள் (www.pathivukal.com), மரத்தடி (www.marathadi.com), வார்ப்பு (www.varppu.com), சிறகு (www.siragu.com), புதினம் (www.puthinam.com), தமிழ்த்திணை (www.tamilthinai.com), தமிழ் உலகம் (www.thamilulagam.com), கீற்று (www.keetru.com), நிலாச்சாரல் (www.nilacharul.com), தமிழ் சோலை (www.tamilsolai.com) இன்னும் பல இணைய இதழ்கள் இணையத்தில் பவனி வருகின்றன.

**படைப்புகள்**

இணைய இதழ்களில் அரசியல், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்பு படைப்புகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் எனப் பல படைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**அரசியல்**

இன்று பெண்கள் எந்தத் துறைகளையும் விட்டு வைக்கவில்லை. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்ற காலம் சென்றுவிட்டது. உதைப்படும் கால்பந்தாக இருப்பதை விட புல்லாங்குழலில் இருந்து வெளிவரும் மெல்லிசையாக இருக்க விரும்புகின்றனர் இன்றைய பெண்கள். எனவேதான் பெண்கள் அரசியல் செய்யவும், அரசியல் பற்றியச் செய்திகளை எழுதி வெளியிடவும் இன்று துணிந்துள்ளனர். தமிழ் நெட் (Tamilnet.com) என்ற இணைய இதழில் அரசியல் பற்றிப் புதிய மாதவி (மும்பை) என்பவர் மும்பை குண்டு வெடிப்புப் பற்றிய நிகழ்வுகளையும் அதனால் மக்கள் அடைந்த வேதனைகளைப் பற்றியும் ஆகஸ்ட் 2006 இதழில் வெளியிட்டுள்ளார்.`துணிச்சல் மிக்க இவ் எழுத்தாளர் ரத்த வெள்ளத்தில் உறைந்து கிடந்த மும்பையை (சலாம் மும்பை) என்னும் தலைப்பில்

எடுத்தியம்பியுள்ளார். இவரைப் போன்றே ரஞ்சனி என்பவர் தமிழ் இலக்கியம் குறித்த செய்திகளை வழக்கறிஞர் ரஜினியுடன் சந்தித்து எழுதியுள்ளார். இன்றைய எழுத்து முறைகளில் அரசியல் பின்னி இணைந்துள்ளதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். ரா. பார்வதி என்பவர் ஆண்களுக்கு இருக்கும் நுண்ணறிவை விட பெண்களுக்கு நுண்ணறிவு அதிகமாகவே உள்ளது என்பதைப் 'பெண்களும் நுண்ணறிவும்' என்ற தலைப்பில் தமிழ்த்திணையில் எழுதி வெளியிட்டுள்ளார். இவைகளைக் காணும்பொழுது பெண்களும் பேசாப் பொருளைப் பேச வந்தவர்களாகவே தோன்றுகின்றனர்.

**கவிதைகள்**

அரசியல் பற்றியச் செய்திகளைவிட கவிதைகளை அதிகமாக பெண்கள் எழுதி இணையத்தில் வெளியிடுகின்றனர். இவர்களில் சிலர் இன்னமுறையில் இன்ன தலைப்பில் கவிதைகள் எழுத வேண்டும் என்ற மரபை மீறி உண்மை உள்ளத்துடன் ஆண்களுக்கு நிகராக கவிதை எழுதுகின்றனர்.

ரஞ்சனி அவர்கள் ஈழப் பெண் கவிஞர்களின் கவிதைகளைப் பற்றிய ஆய்வு சுருக்கத்தைச் செப்டம்பர் 2007-ல் தமிழ் நெட்டில் வெளியிட்டுள்ளார். இவரது 'ரசனை' என்ற தலைப்பில் எழுதிய கவிதை,

"மரங்களுடன் காற்று சங்கீதம் இசைக்க
கருமுகிலும் வானமும் கலந்து கரைய
வெளிச்சத் துகள்களாய்
வந்து விழுகிறது"

என்று ரசனையைத் தம் கவிதை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

வைகைச் செல்வியின் கவிதைகள் திண்ணையில் வெளிவந்துள்ளது. "வீடு" என்ற கவிதைத் தலைப்பில்,

"மூலை முடுக்கெல்லாம்
சிலந்தி வலைப்பின்ன
காலை விரித்தப்படி
நண்டோடும் வலைக்குள்
மண்ணுக்குள் புழுக்கள்
மரப்பொந்தில் ஆந்தை
விண்ணில் சிறகடிக்கும்
பறவைச் சிறுகூடு ... "

என்று குருவியின் வீட்டை இயற்கையோடு ஒப்பிட்டு தன் மனப் பாரத்தை பறவையின் சிறு கூட்டில் இறக்கி வைத்துள்ளார். இவர்களைப் போன்றே சுகிதர்ராணி, மாலதி மைத்ரி போன்ற பெண் கவிஞர்களும் கீற்று இணைய இதழில் கவிதைகளை எழுதியுள்ளார்.

**கட்டுரைகள்**

கவிதைகள் எழுதியவர்கள் வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும், இலக்கிய விருந்துகளையும் எழுதத் தொடங்கியுள்ளனர். அவர்களில் ஜெயந்தி சங்கர் என்பவர் வாழ்க்கையில் எவ்வாறு ஆணும் பெண்ணும் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்பதைப் பற்றி எழுதியுள்ளார். விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் வாழ்வில் சிக்கல் இல்லை என்பதை 'சிக்கலில்லாமல் தொடரும் வாழ்க்கை' என்னும் தலைப்பில் பதிவுகள் இணைய இதழில் பதிவு செய்துள்ளார்.

இரா. உமா என்பவர் சிவகாசியில் வெடித்துச் சிதறும் பட்டாசு தொழிலாளர்களின் வாழ்க்கையைச் சமுதாயக் கண்ணோட்டத்தோடு கீற்று இணைய இதழில் கட்டுரையாக எழுதியுள்ளார். 'சிலம்பு வழி நடத்தும் கனவுகள்', 'காதல்

தூது' என்ற தலைப்புகளில் கட்டுரை எழுதி வெளியிட்டுள்ளனர். இந்த வளர்ச்சி பெண்களின் முன்னேற்றத்தையே காட்டுகிறது.

**சிறுகதை, மொழிப்பெயர்ப்பு**

திண்ணை இணைய இதழில் கோமதி நடராஜன் என்பவர் 'சீரியல் தோட்டம்' என்னும் தலைப்பில் செப்டம்பர் 2007 இதழில் சிறுகதையை எழுதி வெளியிட்டுள்ளார். நாகரத்தினம் கிருஷ்ணா என்பவர் மாத்தரை, வஹரி என்ற மொழி பெயர்ப்புச் சிறுகதையை வெளியிட்டுள்ளார். இதன் மூலம் பெண்கள் மொழிப் பெயர்ப்புத் துறையிலும் ஈடுபட்டுள்ளனர் என்பது புலனாகிறது. பெண்களின் படைப்புகள் இன்று உலகளாவியப் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இதற்குக் காரணமாக இருப்பது இணைய இதழ்களே என்பது நம்மால் மறுக்க இயலாது. பெண்கள் இன்று எக்கருத்தையும் எடுத்து இயம்பும் வல்லமைப் பெற்றவர்கள் என்பதை இக்கட்டுரை மூலமாகக் காணலாம். அரசியல், கவிதை, கட்டுரைகள், சிறுகதைகள், மொழிப்பெயர்ப்பு படைப்புகள் என எண்ணிலடங்கா படைப்புச் சக்கரவர்த்தியாக விளங்கும் பெண்கள் உலகம் வளரும், வளர்ந்து ஓங்கும் என்பது திண்ணம்.

ஆய்வுக்குப் பயன்பட்ட இணைய தளம்

1. (www.tamilthinai.com)
2. (www.thinnai.com)
3. (www.pathivukal.com),
4. (www.keetru.com)
5. (www.nilacharul.com)
6. (www.varppu.com),
7. (www.Tamilnet.com)
8. (www.puthinam.com),
9. (www.tamilsolai.com)